பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 684 **நாள்: 16.11.2026**

அக்வான் புயலின் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சியின் வடக்கு வட்டாரப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக, வடக்கு வட்டார துணை ஆணையர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இராயபுரம் வடக்கு வட்டார அலுவலகத்தில் இன்று காணொலிக் காட்சியின் வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் அக்வான் புயலின் காரணமாக மாநகராட்சி ஆணையர் அவர்களின் உத்தரவின்படி, மாநகராட்சியின் மண்டலம் 1 முதல் 5 வரையிலான வடக்கு வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக, வடக்கு வட்டார துணை ஆணையர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இராயபுரம் வடக்கு வட்டார அலுவலகத்தில் காணொலிக் காட்சியின் வாயிலாக தொடர்புடைய சேவைத் துறைகளின் அலுவலர்களுடன் இன்று (16.11.2026) ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், வட்டார துணை ஆணையாளர் அவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆய்வு செய்து பேசும்போது தெரிவித்ததாவது,

மழைநீர் வெள்ளம் அதிகம் தேங்கக்கூடிய தாழ்வான பகுதிகளில் வாழும் மக்களுக்கு முன்கூட்டிய அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களை பெருநகர சென்னை மாநகராட்சியில் அமைந்துள்ள 69 நிவாரண மையத்தில் தங்க வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இவ்நிவாரண மையங்களில் படுக்கை வசதி, மின்சாரம், கழிடப்பிட வகதி மற்றும் குடிநீர் தயார் நிலையில் உள்ளது. இவர்களுக்கு உணவு தயாரித்து வழங்க 14 சமையற்கூடங்கள், மளிகைப்பொருட்களுடன் சமையல்காரர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

தாழ்வான பகுதிகள், சுரங்க பாதை மற்றும் வெள்ள நீர் தேங்கும் இடங்களில் மழை நீரை வெளியேற்றுவதற்கு 50 எண்ணிக்கையில் 100 குதிரை திறன் கொண்ட பம்ப்கள் மற்றும் 160 எண்ணிக்கையில் பம்ப் பொருத்தப்பட்ட டிராக்டர் வாகனங்கள் தயார் நிலையில் உள்ளன.

புயல் அல்லது மழை காரணமாக விழும் மரங்களை உடனடியாக வெட்டி அப்புறப்படுத்த சக்திமான் வாகனம், 10 லிப்ட் வாகனங்கள், 10 JCB வாகனங்கள், 20 லாரிகள் 5 பாப்காட் மற்றும் 100 பணியாளர்களுடன் தயார் நிலையில் உள்ளனர்.

அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் 24 மணி நேரம் பணியாற்ற சுழற்சி முறையில் பணிபுரிய பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

2,721 சமூக ஆர்வலர்களுக்கு அக்வான் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த அறிவிப்பு வழங்கப்பட்டு அவர்களின் உதவியினை பெறுவதற்கு நடவடவடிக்கை எடுக்கப்பட்டது.

வெள்ளபாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்கு வெள்ள நீரை தடுப்பதற்கு குடியுருப்பு பகுதிகளில் மணல் மூட்டைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மின்சாரம் தடைப்பட்ட இடங்களில் ஜென்செட்வுடன் கூடிய உயர்மட்ட மின்சார விளக்குகள் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

தாழ்வான பகுதிகளில் தேங்கும் தண்ணீரை வெளியேற்றுவதற்கு மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன. சுரங்கப்பாதைகளில் தண்ணீர் தேங்காமல் உடனடியாக அகற்றிடவும் கண்காணிப்புடன் பணியாற்றிடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதிக வெள்ளம் சூழும் இடங்களில் பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்ல 30 படகுகள் தயார் நிலையில் உள்ளன.

தீயணைப்புத் துறை, மாநில மற்றும் தேசிய பேரிடர் மீட்பு படையினர்கள் (SDRF & NDRF) மாநகராட்சியின் அலுவலர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க இணைந்து பணியாற்ற தயார்நிலையில் உள்ளனர். அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து முன்னெச்சரிக்கை மற்றும் மீட்பு நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.

Greater Chennai Corporation

Press Release

P.R. No. 684 **Date: 16.11.2026**

Due to Cyclone Akvan, a review meeting was held Today via video conferencing at the Royapuram North Regional Office under the chairmanship of the North Regional Deputy Commissioner, Mrs. Shweta Suman, I.A.S., regarding the precautionary measures undertaken in the northern regional areas of the Greater Chennai Corporation.

As per the orders of the Hon'ble Chief Minister of Tamil Nadu, precautionary measures have been undertaken in the Greater Chennai Corporation areas in view of the Northeast monsoon. In this regard, under the instructions of the Corporation Commissioner due to Cyclone Akvan, a review meeting was held today (16.11.2026) via video conferencing with the officials of the concerned service departments at the Royapuram North Regional Office, chaired by North Regional Deputy Commissioner Mrs. Shweta Suman, I.A.S., regarding the precautionary measures implemented in the northern region comprising Zones 1 to 5 of the Corporation.

While reviewing the precautionary measures during the meeting, the Regional Deputy Commissioner stated the following:

- **Relief Centers:** Advanced notices have been given to people living in low-lying areas where rainwater is prone to heavy stagnation. Arrangements have been made to accommodate them in 69 relief centers located within the Greater Chennai Corporation.
- **Facilities & Food Preparation:** Bedding facilities, electricity, restrooms, and drinking water are kept ready in these relief centers. To prepare and provide food for them, 14 kitchens along with cooks and grocery supplies are on standby.
- **Water Pumping Equipment:** To pump out rainwater from low-lying areas, subways, and water-stagnant locations, 50 units of 100-horsepower pumps and 160 pump-fitted tractor vehicles are kept ready.
- **Tree Removal Equipment & Personnel:** To immediately cut and remove trees fallen due to storms or rain, Shaktihaan vehicles, 10 lift vehicles, 10 JCB vehicles, 20 lorries, 5 Bobcats, and 100 personnel are kept ready.
- **Workforce Shifts:** Work orders have been issued for officers and staff to work in shifts 24 hours a day.

- **Volunteers:** Notices regarding Cyclone Akvan precautionary measures have been provided to 2,721 social volunteers, and steps have been taken to utilize their assistance.
- **Flood Prevention & Lighting:** Sandbags are kept ready in residential areas to prevent floodwater entry and avoid flood damages. High-mast floodlights equipped with generators are kept ready in areas where power supply is interrupted.
- **Subway & Boat Monitoring:** Motor pumps are on standby to discharge water stagnating in low-lying areas. Instructions have been given to immediately clear water without stagnation in subways and to work with close monitoring. 30 boats are kept ready to rescue and move the public to safe locations in severely flooded areas.
- **Disaster Response Coordination:** The Fire Department, State and National Disaster Response Forces (SDRF & NDRF) are ready to work collaboratively in accordance with the instructions of Corporation officials. She advised all officials to coordinate and intensively carry out precautionary and rescue operations.

Issued by: Joint Director / Public Relations Officer,
Greater Chennai Corporation.